**செய்தி அறிவிக்கை எண்.: 01/ 2021**
**விளம்பர எண்.: 574**

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
## துறைத் தேர்வுகள் - டிசம்பர் 2020
## அறிவிக்கை

**துறைத் தேர்வுகள்- டிசம்பர் 2020-க்கான விண்ணப்பங்கள் இணையவழி மூலமாக மட்டும் வரவேற்கப்படுகின்றன.**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நிரந்தரப் பதிவு துறைத்தேர்வுகள் டிசம்பர்-2019-ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, துறைத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்குமுன் விண்ணப்பதாரர்களின் விவரங்களை நிரந்தரப் பதிவில் பதி ய வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆதார் எண்ணை கட்டாயமாக துறைத் தேர்வுக்கான நிரந்தரப் பதிவுடன் இணைக்க வேண்டும். எனவே, ஏற்கெனவே நிரந்தரப் பதிவு செய்தவர்களும், அதில் ஆதார் எண்ணைப் பதிய வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையவழி மூலமாக மட்டுமே துறைத் தேர்விற்கு விண்ணப்பிக்க வேண்டும். பிற வகைகளில் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது . விண்ணப்பக் கட்டணம் செலுத்தியிருந்தாலும் அவை நிராகரிக்கப்படும்.

| | |
|---|---|
| **தேர்வின் பெயர்** | **: துறைத் தேர்வுகள் - டிசம்பர் - 2020** |
| **அறிவிக்கை நாள்** | **: 08.01.2021** |
| **முடிவு நேரம் மற்றும் நாள்** | **: 29.01.2021 & 11.59 பி.ப.** |
| **தேர்வு நடைபெறும் தேதிகள்** | **:14.02.2021 முதல் 21.02.2021 வரை (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை உட்பட)** |
| **தேர்வு கட்டணம்** | **: பதிவு கட்டணமாக ரூ.30/-ம், ஒவ்வொரு தேர்விற்கும் தேர்வு கட்டணம் ரூ.200/-ம் சேர்த்து இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். பிற வகைகளில் செலுத்தப்படும் கட்டணங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது / ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.** |

**பொதுவான விவரங்கள்:**

1. துறைத் தேர்வுகள் டிசம்பர் - 2020 திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் தேர்வு அமைப்பு முறையில் அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 02.03.2017/ அரசாணை (நிலை) எண்.144, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 26.10.2018-ன்படி நடைபெறும்.
2. விண்ணப்பதாரர்கள் கால அட்டவணையில் உள்ள எத்தனை தேர்வுகளையும் எழுதுவதற்கு விண்ணப்பிக்கலாம். ஒரு விண்ணப்பதாரர், ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வுகளை எழுத விண்ணப்பித்திருந்து, அதற்காக அத்தேர்வுகளுக்குரிய தேர்வு நுழைவுச் சீட்டு பெறப்பட்டிருந்தாலும், தனது விருப்பப்படி அத்தேர்வுகளில் ஏதாவது ஒரு தேர்வை மட்டுமே எழுதுவதற்கு அவர் அனுமதிக்கப்படுவார்.
3. விண்ணப்பங்கள் தேர்வாணைய இணையதளம் www.tnpsc.gov.in / www.tnpscexams.net மூலமாக மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்
4. **விண்ணப்பிக்கும்போது கட்டண விவரங்களைப் பதிவு செய்த பின்னர் , அதற்கான தகவல் திரையில் வரும்வரை காத்திருக்கவும் . இடையில் "Back" அல்லது "Refresh" பொத்தான்களை இயக்காமல் காத்திருக்க வேண்டும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும் . இல்லையெனில் பணப்பரிமாற்றம் தடைபடும் . இரண்டாம் முறையாக பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும் . இதை தவிர்ப்பதற்காகக் காத்திருக்க வேண்டும் . விண்ணப்பதாரர் பிற்காலத் தேவைக்காக விண்ணப்ப நகலினை பதிவிறக்கம் செய்து வைத்திருக்கலாம் .**

5 விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு தேர்விற்கும் **ரூ.**200/- தேர்வுக் கட்டணமாகவும், பதிவுக் கட்டணமாக **ரூ.**30/-ம் சேர்த்து இணையவழி செலுத்தும் முறையில் அதாவது இணையவங்கி, பற்று அட்டை/ **கடன் அட்டை முறை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு முறையில் மட்டுமே தேர்வு கட்டணத்தை செலுத்தலாம். பிற வகைகளில் செலுத்தப்படும் கட்டணங்கள்** அனுமதிக்கப்பட மாட்டாது / அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தால் கட்டணம் திருப்பித் தரப்படமாட்டாது.

6 துறைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அண்மையில் எடுக்கப்பட்ட (மூன்று மாதங்களுக்கு மிகாமல்) பாஸ்போ ர்ட் அளவிலான நீலம் அல்லது வெள்ளை நிற பின்புலம் கொண்ட தெளிவான நிழற்படத்தை இணையவழி விண்ணப் பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் . நிழற்படத்தின் அளவு 30kb - 40kb மற்றும் **165 x 125 pixels**–அளவிலும் மற்றும் கையொப்பம் 20kb - 30kb மற்றும் **80 x 125 pixels**– அளவிலும் நல்ல தரத்துடன் இருத்தல் வேண்டும் . **தற்படம் / போலராய்டு நிழற்படங்கள் கொண்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது .**

7 மேற்காணும் அறிவுரைகளை பின்பற்றாத விண்ணப்பங்கள் செல்லாததாக்கப்படும் .

8 நிழற்படம் மற்றும் கையொப்பத்தினை இணையவழி விண்ணப்பத்தில் அதற்கான இணைப்புகளில் முறையே பதிவேற்றம் செய்ய வேண்டும் .

9 விண்ணப்பதாரர்கள் தங்களின் தனித்துவ விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை குறிப்பிட்டு தேர்வாணைய இணையதளத்தில் தங்களது நுழைவுச்சீட்டினை 12.02.2021 முதல் 21.02.2021 வரை பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம். தங்களது பணிப்பதிவேட்டில் தேர்ச்சி குறித்து பதியும் பொருட்டு நுழைவுச் சீட்டினை பத்திரப்படுத்த வேண்டும். மாற்று நுழைவுச்சீட்டு குறித்து பெறப்படும் கோரிக்கைகள் கண்டிப்பாக பரிசீலிக்கப்பட மாட்டாது.

10 விண்ணப்பதாரர்கள் தேர்வு தொடங்குவதற்கு அரை மணி நேரம் முன்பாக தேர்வுக்கூடத்திற்குள் வருகை புரிய வேண்டும். தேர்வுகள் தொடங்கிய பின்னர் வரும் விண்ணப்பதாரர்கள் எவரும் தேர்வுக்கூடத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

11 மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள், அவர்களின் இயலாமை வகையினை விண்ணப்பத்தில் தவறாமல் குறிப்பிட வேண்டும். மேலும், மாற்றுத் திறனாளி குறித்த ஆதாரத்தினை கட்டாயமாக தேர்வு அறையில் சமர்ப்பிக்க வேண்டும்.

12 பார்வையற்ற விண்ணப்பதாரர்கள் / தங்கள் கைகளால் எழுத முடியாத மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் மட்டுமே தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்கள் அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இதர மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு (காது கேளாதோர், வாய் பேசாதோர் போன்ற) தேர்வு எழுத உதவியாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

13 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பின்னர் தேர்வு மையம் மாற்றம், பெயர் / தந்தை பெயர் / வயது / பிறந்த தேதி -ல் திருத்தம் போன்ற கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

14 துறைத்தேர்வு விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் / பாடத்திட்டம், தேர்வு அமைப்பு முறை / தேர்வின் பெயர் / தேர்வுக்குறியீடு / தேர்வுகளுக்கான கட்டணம், துறைத்தேர்வுகள் - டிசம்பர் - 2020-க்கான கால அட்டவணை முறையே பிற்சேர்க்கை I, II, III மற்றும் IV எனும் கீழ்க்காணும் விவரங்களை தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in / www.tnpscexams.net-ல் காணலாம்.

இணைப்பு - I - துறைத்தேர்வு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்
இணைப்பு - II - பாடத்திட்டம் / தேர்வு அமைப்பு முறை
இணைப்பு - III - தேர்வின் பெயர் / தேர்வுக்குறியீடு / தேர்வுகளுக்கான கட்டணம்
இணைப்பு - IV - துறைத்தேர்வுகள் - டிசம்பர் 2020-க்கான கால அட்டவணை

15. விண்ணப்பதாரர்கள் கொள்குறி வகை மற்றும் விரிவான விடை எழுதும் வகையில் ஒருங்கே அமையப் பெற்ற மேற்படி துறைத்தேர்வுகளில் இரண்டு வகைத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்களைக் கட்டாயமாகப் பெற்றால்தான் குறிப்பிடப்பட்ட துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்றவராக கருதப்படுவர்.

16. தேர்வுகளின் முடிவினைத் தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in வாயிலாக அறியலாம். தேர்ச்சி பெற்றவர்களின் பதிவெண்கள், பெயர், தந்தை பெயர், பிறந்த தேதி மற்றும் முகவரி ஆகியவை அடங்கிய முழுவிவரப்பட்டியல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டில் வெளியிடப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகளை உரிய தொகையினைச் செலுத்தி "எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர், வெளியீட்டுக் கிடங்கு, அண்ணா சாலை, சென்னை-600 002" என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட மைய நூலகம் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகள் தேர்வாணைய அலுவலகத்திலிருந்து வழங்கப்படமாட்டாது.

செயலாளர் (ம) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)


**தொலைபேசி** : 044 – 25300300 / 336 / 337 / 338 / 339
**இணையதளம்** : www.tnpsc.gov.in / www.tnpscexams.net
**மின்னஞ்சல்** : contacttnpsc@gmail.com
Toll Free No. : 1800 425 1002